Publication : Nungai Times Region : Chennai

Date : Sep 2, 2009

# 'ஐடிஸ்கவரி எஜுகேஷன்' துவக்கும் 'எக்ஸீட் சிக்ஷா யாத்ரா' ஆழ்வார்பேட்டை முதல் எக்ஸீட் மழலையர் பள்ளி துவக்கம்




இந்தியாவின் கல்வித் துறையை மறுசீரமைக்கும் நோக்கத்துடன் செயல்படும் சமூக அமைப்பான 'ஐடிஸ்கவரி எஜுகேஷன்' தமிழகக் கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்த குறிப்பாக அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்த 'எக்ஸீட் சிக்ஷா யாத்ரா' என்ற பெயரில் சென்னையில் தனது முதல் மழலையர் பள்ளியைத் துவக்கி உள்ளது. இந்த யாத்திரையின் ஒரு பகுதியை சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள நடமாடும் எக்ஸீட் பேருந்து தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயணித்து குழந்தைகளை மையமாக வைத்து ஆசிரியர்கள் கல்வி வழங்கும் நவீன பாடத் திட்டத்தின் ஆற்றலை நிரூபித்துக் காட்டும். 2009 செப்டம்பர் 2 ஆம் தேதி சென்னை மயிலாப்பூரில் இருந்து சிக்ஷா யாத்ரா தொடங்கி தமிழகம் முழுவதும் உள்ள 50 நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பயணிக்கும். குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பள்ளி முதல்வர்கள், தாளாளர்கள் உள்ளிட்ட கல்வித் துறையில் தொடர்புடைய அனைவரையும் சந்திக்கும் வகையில் இந்தப் பயணம் அமையும்.

'எக்ஸீட் டீச்சிங் ஃபெலோஸ்' என்ற பெயரில் ஐஐடி உள்ளிட்ட முன்னணி கல்வி நிலையங்களில் பயிற்சி பெற்ற இளம் பட்டதாரிகள் தேர்வு செய்யப்பட்டு 3 மாதங்கள் மழலையர் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய கல்வி முறை பற்றி விளக்குவார்கள். இவர்கள் இந்தப் பேருந்தில் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள். மேலும் இந்த பேருந்து ஆசிரியர்கள், குழந்தைகளுக்கான மதிப்பீடு பயிற்சிப் புத்தகம், பள்ளியில் பயன்படுத்தும் கல்வி தொடர்பான பொருட்கள் உள்ளிட்ட நடமாடும் கல்வித் திட்ட ஆதார மையம் என்னும் ஆய்வு அடிப்படையிலான எக்ஸீட் பாடத்திட்ட வழிகாட்டிகளை அறிமுகப்படுத்தும்.

இந்த யாத்திரையின் ஒரு பகுதியாகத் தமிழகப் பள்ளி முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளுக்காக 'உங்கள் சிறந்த பள்ளியை மேம்படுத்துங்கள்' என்னும் தலைப்பில் 70 நிகழ்ச்சிகளை நடத்த உள்ளோம். அடுத்த ஐந்து மாதங்களில் தமிழகம் முழுவதிலும் இருந்து சுமார் 300 பள்ளி முதல்வர்கள் இதில் கலந்து கொள்ள இருக்கின்றனர்.